ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 2177/15 - 2020 මැයි මස 29 වැනි සිකුරාදා - 2020.05.29
*2177/15 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1995, யூலை மாதம் 25 ஆந் திகதிய 881/5 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1995 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப் பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 (அ) ஆம் பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப் பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) (1) ஆம் உட்பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் படி காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகளை மாத்திரம் இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

எஸ்.எம். சந்திரசேன,
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்.

எனது இல. : 03/93/LRB/26-II
காணி எடுத்தல் உத்தியோகத்தரின் இல. : කැල/16/ඉඅ/183.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு,
காணிச் செயலகம், "மிஹிகத மெதுர",
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2020, ஏப்பிறல் 22.

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், களனி பிரதேச செயலாளர் பிரிவில், இல. 257A, ஹிம்புட்டுவெல்கொட கிராம அலுவலர் பிரிவில், ஹிம்புட்டுவெல்கொட கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.05.29 ஆந் திகதிய கம் 4145 ஆம் இலக்க, திருத்தம் செய்யப்பட்ட ஆரம்ப வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டின் எல்லைகள் :

**1. துண்டு இல. 01 - வெல்யாய கும்புர, ஹல்கஹ கும்புர, கொஸ்கஹ கும்புர - விஸ்தீரணம் : சுமார் 0.0091 ஹெக்டயார்**

வடக்கு : இந்த வரைபடத்தின் துண்டு இல. 2 மற்றும் ஆ.வ. கம் 2813 இல் துண்டு இல. 30 ; கிழக்கு : ஆ.வ. கம் 2813 இல் துண்டு இல. 30 மற்றும் ஆ.வ. கொ 4850 இல் துண்டு இல. 21 ; தெற்கு : ஆ.வ. கொ 4850 இல் துண்டு இல. 21 மற்றும் இந்த வரைபடத்தின் துண்டு இல. 2; மேற்கு: இந்த வரைபடத்தின் துண்டு இல. 2.

06-65